


# கனாக் கண்டேன்

மூதூர் முகைதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனாக் கண்டேன்

(இசைப் பாடல்கள்)

**மூதூர் முகைதீன்**

**வெளியீடு**

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : கனாக் கண்டேன்

வகை : பாடல்கள்

நூலாசிரியர் : ஏ.எம். முகைதீன்

நொக்ஸ் வீதி, மூதூர் - 05.

பதிப்புரிமை : நூலாசிரியருக்கு

முதற் பதிப்பு : 2019.மார்கழி

வெளியீடு : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

மூதூர் - 05

தளக்கோலம் : தௌபீக் எம்.சனூஸ்

பிரதிகள் : 500

விலை : 300/=

**KANAAK KANDEAN - Songs**

Author : A.M. Mohaideen, Knox Road, Mutur-05.

First Edition : 2019 December | CopyRight : Author

Layout&Cover : T.M. Sanoos | Copies : 500

Publication : Mutur Kalai Ilakkiya Ondriyam

Printers : S&S Printers

Price : 300/=

ISBN : 978-624-96010-0-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலக்கியம் என்பது மக்களை நல்வழிப்படுத்தவும் அவர்களுக்கு வழிகாட்டக் கூடியதாகவும் இருக்கவேண்டும். அதுவே நல்ல இலக்கியத்தின் கோட்பாடாகும் இதனைப் பின்பற்றியே பல இலக்கியவாதிகள் தங்கள் ஆக்கங்களை எழுதிவருகின்றனர். இதில் கவிஞர் மூதூர் முகைதீன் ஒருவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவர் இதுவரையும் ஏழு நூல்களை படைத்துள்ளார் "கனாக் கண்டேன்" என்ற இப்பாடலாக்க நூல் இவரது எட்டாவது நூல் ஆகும். இலக்கியப்பரப்பில் ஒரு துறையில் மட்டும் தன்னை முடக்கி வைக்காமல் கவிதை, கட்டுரை கதை, பாடலாக்கம் என பல தடங்களில் கால் பதித்து தனது பங்களிப்பை மிகவும் காத்திரமான முறையில் வெளிப்படுத்தி வரும் ஒரு பல்துறைப் படைப்பாளி.

நமது பிரதேசத்தில் மெல்லிசைப் பாடல்களைப் எழுதுபவர்கள் மிகவும் குறைவு இதனால் இப்பாடல்கள் பற்றிய தெளிவு, புரிந்துணர்வு என்பன வாசகர்களுக்கு கிடைக்காமல் போயுள்ளன. இக் குறைபாட்டை "கனாக் கண்டேன்" என்ற இந் நூல் மூலம் கவிஞர் மூதூர் முகைதீன் நிறைவுசெய்துள்ளார்.

கவிதைத்துறையில் பல விருதுகளையும், பரிசுகளையும் கடந்தகாலங்களில் பெற்று தனது மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ள இவரின் கவிதைகளைப் பற்றிய ஓர் ஆய்வினை கவிதாயினி ரிம்ஸா முகம்மது அவர்கள் "விடியல்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டமை இவரது திறமைக்கும் ஆற்றலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் சிறந்த கருத்தாழத்து டனும், இசை நயத்துடனும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும். மன உணர்வு, தொழிலாளர்வர்க்கம், புரட்சிகர சிந்தனை, காதல் போன்ற பலதரப்பட்ட விடயங்களை மிகவும் இனிமை யான, எளிமையான சொற்களைக் கொண்டு படைத்துள்ளார்.

இப்பாடல்களை இசையோடு பாடி அதனை ஏதாவது ஒரு இசைத்தட்டு வடிவத்தில் வெளியிட்டால் இதன் சுவையை நாம் இன்னும் அதிகமாக அனுபவிக்கலாம்.

கவிஞர் மூதூர் முகைதீன் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபராகும். இவரது நான்கு நூல்கள் ஓய்வுக்குப் பின்னரே வெளிவந்துள் ளமை இவரின் ஓயாத எழுத்துப் பணிக்கு ஒரு சான்றாகும்.

சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி கவிதை எழுதுவதில் அதிகம் அக்கறை காட்டும் இவர் இப்பாடல்களிலும் அதனை எடுத்துக் காட்டத் தவறவில்லை. "புதிய கவிஞன்" என்ற பாடலில் பின்வரும் ஒரு பந்தியினை இதற்கு பதச்சோறாக் காட்டலாம்.

*பொய்யும் புரட்டும்*
*புரிந்து பதவிகளே*
*பெற்று வாழ்பவர் புனிதர்களாக ...*
*காற்று மழையிலும்*
*உழைப்பவர் இங்கு பதர்களாக ...*
*மக்கள் வரிப்பணத்தை*
*சுரண்டி எடுப்போர்*
*சுகத்தில் வாழும் நிலை மாற*
*புதுக் கவி எழுதி*
*புதுமைகள் படைத்திடுவேன்...*

என மக்களை வருத்துவர்களுக்கு இதில் எச்சரிக்கை விடுத் துள்ளார். இது போலவே பல பாடல்கள் உணர்வூட்டும் வகையில் ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இணைந்த உள்ளம், பிரியாத இதயங்கள் ஆகிய தலைப்பக்களில் காதல் பாடல்களை இனிமையான தமிழில் தந்துள்ளார். இதை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விரக்தி, ஏக்கம் போன்ற பல பாடல்களில் மனித உள்ளங்களின் வேதனைகளைக் கூறும் வகையில் மிகவும் கவித்துவமாக பாடல்களைக் கவிஞர் சித்திகரித்துள்ளார். சுமார் ஐம்பது வருடங்களை அண்மிக்கும் இவரின் எழுத்துப்பணி இன்னும் சிறந்து உயர வாழ்த்துகின்றேன். தொடர்ந்தும் பல நூல்களை இவரிடமிருந்து இலக்கிய உலகம் எதிர்பார்த்துள்ளது.

– கலாபூஷணம் கலைமேகம் ஏ.எஸ் இப்றாஹிம்

***02.11.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னுரை......**

நூல் வெளியீடுகள் அதிகரித்து அதனை வாசிப்பவர்கள் குறைவடைந்து வரும் ஒரு காலகட்டத்தில் நாமுள்ளோம். ஒரு நூலை ஆக்கி வெளியிடுவதில் உள்ள வேதனையும் சுமையும், அதற்கான அர்ப்பணிப்பும் அளவிடமுடியாதவை என்பதை அனுபவப்பட்டவர்கள் அறிவார்கள்.

இவற்றையெல்லாம் புறம் தள்ளி நூல் வெளியீடு செய்யும் ஆர்வலர்களில் நானும் ஒரு பங்காளியாக இணைந்துகொள்வதில் பெருமிதமடைகின்றேன். கடந்த காலத்தில் கவிதை, கட்டுரை, உருவகக் கதைகள் என ஏழு நூல்களை வெளியிட்டதன் தொடராக "கனாக் கண்டேன்" என்ற பாடலாக்கத் தொகுப்பை இப்போது உங்கள் கரங்களில் தவழவிட்டுள்ளேன். தற்காலத்தில் கவிதைகளை விடவும் மெல்லிசைப்பாடல்களே மக்கள் மத்தியில் ஜனரஞ்சகமிக்கதாக திகழ்கின்றது என்பதே எனது அபிப்பிராயமாகும். ஆனால் இவைகள் நூலாக்கமாக வெளிவருவதில் ஒரு மந்தநிலையே காணப்படுகின்றது.

இலங்கை வானொலிக்கு 1980 ஆம் ஆண்டு ஒரு மெல்லிசைப் பாடலை அனுப்பியிருந்தேன். அது ஒரு மாதத்தின் பின் பாடகர் ஒருவரின் இசையுடன் ஒலிபரப்பாகியது. இதுவே எனது முதல் பாடலாகும்.

அதன் பின்னர் நீண்டகாலமாக இத்துறையில் நான் ஈடுபாடு காட்டவில்லை. எனினும் பத்திரிகைகளுக்கும் பாடசாலை விழாக்களுக்கும் பாடலாக்கப் போட்டிகளுக்கும் பாடல்களை எழுதி வந்தேன். மற்றும்படி மெல்லிசைப் பாடல் பற்றிய துறைசார் புலமை எனக்கு ஏதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 புத்தாயிரம் ஆண்டில் லேக் ஹவுஸ் நிறுவனமும், சிலுமின பத்திரிகையும் இணைந்து தேசியரீதியாக நடாத்திய தேசிய ஐக்கியத்திற்கான பாடலாக்கப்போட்டியில் எனது பாடலாக்கம் முதலாம் இடத்தைப் பெற்றது. இதன் பரிசளிப்பு விழா மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்றவேளை மேடையில் அந்தப் பாடலை இலங்கையின் பிரபல பாடகர் வீ. முத்தழகு அவர்கள் பின்னணி இசையில் பாடி இனிமையூட்டிய நிகழ்வு மறக்க முடியாததாகும்.

இப்படி என்னால் எழுதப்பட்ட பாடல்கள் பலவற்றை நூலுருவில் கொண்டுவர வேண்டும் என்ற கனவு நீண்டகாலமாக இருந்தது. அது "கனாக் கண்டேன்" என்ற இந்நூல் மூலம் நனவாவதையிட்டு பெரிதும் திருப்தியடைகின்றேன்.

மேலும் எனது எழுத்துலகப் பயணத்தின் அடிநாதமாக மனித நேயம், சமகால நிகழ்வுகள், வர்க்க முரண்பாடுகள், விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை என்பனவைகளே பிரதான பேசுபொருளாக இருந்து வந்துள்ளன. இந்த இசைப் பாடல்களிலும் இத்தகைய கருத்துக்களைக் கூறும் பாடல்கள் கணிசமாக இடம் பெற்றுள்ளன.

ஒரு மனிதன் ஏதாவது ஒரு தத்துவார்த்தத்தில் அல்லது சித்தாந்தத்தில் உள்வாங்கப்படும் போது அதுவே அவனது செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கும். அந்தவகையில் எனது எழுத்துக்களிலும் இத்தகைய இடதுசாரித்துவம் சார்பான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளமை தவிர்கக முடியாததே.

எமது காலகட்டத்தில் வாழ்ந்து மறைந்த பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தனது குறுகிய கால வாழ்க்கையில் மிகவும் குறைந்தளவு பாடல்களை எழுதியுள்ளார். அவற்றில் பெரும்பாலானவை சமூகமாற்றத்திற்கான மக்கள் நலன்களை எடுத்துக்கூறும் கருத்துக்களை மையப்படுத்தியவையே. இன்றும் கூட அவரின் பாடல்கள் மிகவும் பிரபல்யமாகப் பேசப்பட்டும் பாடப்பட்டும் வருகின்றமை அவர் மக்கள் கவிஞர் என்பதற்கு ஒரு எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டாகும். அவர் மீது நான் வைத்திருக்கும் ஆகர்ஷிப்பின் காரணமாக ஒரு பாடலையும் இதில் எழுதியுள்ளேன்.

இறுதியாக இதிலுள்ள பாடல்களைப் படித்து உங்கள் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எனக்கு வழங்கினால் அது என்னை மேலும் வளப்படுத்தப் பேருதவியாக இருக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூல் வெளிவர பல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய நண்பர்களுக்கும் முகவுரை வழங்கிய மூத்த கவிஞர் கலாபூஷணம் கலைமேகம் இப்ராஹீம் மற்றும் அறிமுக உரை வழங்கிய எழுத்தாளர் நண்பர் கலாபூஷணம் ஏ.எஸ். உபைத்துல்லா ஆகியோருக்கும், இதன் கையெழுத்து பிரதியினை கணினியில் பிரதி செய்து உதவிய மூதூர் பிரதேச சபை நூலக ஊழியர் ஜனாப் எம்.எம்.இர்பான் அவர்களுக்கும், அழகுற நூல் வடிவமைப்பு மற்றும் தளக்கோளம் செய்து தந்த ஜனாப் ரீ.எம். சனூஸ் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- மூதூர் முகைதீன்**
0774203500

நொக்ஸ் வீதி,
*மூதூர்- 05*
*10.12.2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊடகத்தின் வாயிலாக இன ஒற்றுமைக்கான பாலம்" என்ற கருத்தை மையப்படுத்தி எனது கவிதைகளை ஆய்வு செய்து அதனை "**விடியல்**" என்ற பெயரில் நூலாக்கி வெளியிட்டதன் மூலம் இலக்கிய உலகிற்கு என்னை இனம்காட்டிய

பல்துறைப் படைப்பாளி, ஊடகவியலாளர், பூங்காவனம் சஞ்சிகையின் ஆசிரியை

## கவிதாயினி
# வெலிகம ரிம்ஸா முஹம்மத்

அவர்களுக்கு

இந்நூல்

# சமர்ப்பணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீந்தும் வெண்ணிலா

**பல்லவி**

விண்ணில் நீந்தும் வெண்ணிலா - என்
விழியில் ஆட வா நிலா
மனதின் கவலை தீர்ந்திட - இந்த
மண்ணில் வந்து போ நிலா.... (விண்ணில்...)

**சரணம்**

இருளை விரட்ட ஒளியினை
இறக்கி வைப்பாய் இரவிலே
உருகும் எந்தன் உள்ளம் குளிர
உனது ஒளியைத் தா நிலா.... (விண்ணில்...)

விடியும் பொழுதில் விலகி நீ
கண்ணை விட்டும் மறைகிறாய்
இதயம் மகிழ மீண்டும் நீ
உதய மாகி வா நிலா..... (விண்ணில்...)

வெள்ளிப் பூக்கள் சிரித்திட
வெளிச்சம் போட்டுப் போகிறாய்
அல்லி மலர்கள் மலர்ந்திட
அமுத ஒளி தருகிறாய்...... (விண்ணில்...)

இரண்டு வாரம் இருளிலே
தவிக்க வைத்து மறைக்கிறாய்
எங்கு சென்று தேடுவோம்
ஏனோ உள்ளம் வதைக்கிறாய்.....? (விண்ணில்...)

தங்கம் போல மின்னியே
பொங்கும் நிலவைப் பொழிகிறாய்
கங்குலினை விரட்டியே
பங்கம்தீர்த்து வைக்கிறாய்.... (விண்ணில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கனியும்

**பல்லவி**

குறிஞ்சியிலே தவழ்ந்து வரும்
குளிர் காற்று உடல் தழுவ
நெஞ்சினிலே பல நினைவுகளே...
நெருங்கி வரும் இன்பக் கனவுகளே...
பறந்தேன்... பறந்தேன்...
வானத்தின் மீதில்
பிறந்தேன்... பிறந்தேன்...
புதிதாய் உலகில்!
(பூங்காற்று..)

**சரணம்**

நதிகள் நடக்கும் பாதை வழியே
பதியும் கரையின் தடங்கள் போல
விதியின் வழியே போகும் வாழ்வு
விழியில் நின்று வாழும்....
அதில் கழிப்போம் சில காலம்
கண்ணீர் வடிப்போம் சில காலம்...
யாவும் இங்கே வாழ்க்கை தரும் பாடம்
இதனை மறப்போம் இந்த நேரம்...
(பூங்காற்று..)

இசையில் தோன்றும் இனிமை நெஞ்சில்
இன்பம் ஊட்டிச் செல்லும்
இரவும் பகலும் உறக்கமின்றி
உள்ளம் தேடி அலையும்
கலக்கம் ஏன் மனமே....?
கவிபாடு தினமே..
கனியும் அந்தக் காலம் வந்து
கையில் வந்து சேரும்...
(பூங்காற்று..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மொழித் தமிழ்

**பல்லவி**

செந்தமிழ் மொழியே.... எந்தமிழ் மொழியே....
என் விழி வழியே வருவாயா - என்
உடலில் ஓடும் உதிரம் கலந்து
உணர்வினை ஊட்டி ஒலிப்பாயா...
(செந்தமிழ்...)

**சரணம்**

செம் மொழி என்றும்
சீர் மொழி என்றும்
பேர் பெற்றாய்
நானும் உன்னை வாழ்த்தி
நாளும் போற்றி மகிழ்வேனே
கனிவாய் நெஞ்சில் நின்று
கவிதையாய் வந்து
கனியாய் நாவில் இனிப்பாயா...
(செந்தமிழ்...)

அறுசுவை விருந்தாய்
முக்கனிச் சுவையாய்
முத்தமிழ் என்ற அமுதனாய்
தேனாய் இனிக்கும் தேன்மொழி நீயே...
மண்ணில் வந்த முதல் மொழி நீயே
கண்ணில் மணியாய் வாழும் தமிழே....
(செந்தமிழ்...)

பாரில் வாழும்
பழந் தமிழ் மொழியே....
பசுமையாய் திகழும்
பைந்தமிழ் மொழியே....
ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் இங்கு
பாயிரம் பலவும் பாடிடும் மொழியே
தாய்மொழி நீயே
எம் உயிர் மொழி தமிழே.... (செந்தமிழ்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராய் தோழா...

**பல்லவி**

சிறகை விரிப்போம்
சிகரத்தைத் தொடுவோம்...
உயரப் பறந்தே
உலகினை வெல்வோம்...
வாராய் தோழா....
வாழ்வில் வளம் காணவே
வாராய் தோழா....
(சிறகை....)

**சரணம்**

உண்மை என்றும் உறங்குவதில்லை
உயர்ந்த உள்ளம் இழிவதுமில்லை
உத்தமர் காட்டிய வழியில் நடந்தால்
உலகை வெல்லலாம்....
உனக்கும் எனக்கும் உரிமைகள் கிடைக்க
உணர்வுடன் இணைவோம் வாராய் தோழனே...!
(சிறகை....)

வேற்றுமை களையை வேரோடறுத்து
போற்றும் ஒற்றுமை விதைகளைப் பதிப்போம்...
பகைமையை வெல்லும் படையாய்த் திரண்டு
உறவை வளர்க்கும் உறுதியைக் கொள்வோம்...
ஆற்றும் பணியால் அனைவரும் வாழ
ஆற்றல்மிக்க தலைமுறை காண்போம்...
வாராய் தோழனே...!
(சிறகை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டும் வறுமை நீங்கிட வேண்டும்!
வாழ்வில் வசந்தம் வீசிட வேண்டும்!
பாட்டும் பண்ணும் ஒலித்திட வேண்டும்!
பாசம் நேசம் பெருகியே நாட்டில்
பாவிகள் அழிந்திடும் வழியினைக் கண்டு
பாதைகள் எங்கும் பாதம் பதித்திட
வாராய் தோழனே...!

(சிறகை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதியின் குரல்

**பல்லவி**

நிலவு காயும் இரவு நேரம்
நினைவு நெஞ்சை வாட்டுதே...
உலவும் தென்றல் உடலில் மோதி
உறங்கும் விழியைத் திறக்குதே.....

**அனுபல்லவி**

கனவு போல யாவும் இங்கே
கரைந்துபோன நிலையிலே
கானல் நீரைத் தேடி ஓடும்
கவரிமானின் நிலைமையே...
(நிலவு காயும்...)

**சரணம்**

கரைமோதும் கடல் அலைபோல்
காலம் வந்து போகும்
இடம் மாறும் என் வாழ்வில்
இடர் மட்டும் தொடரும்
உடல் நொந்து வாடும்
இந்தத் துயர் என்று தீரும்.....
(நிலவு காயும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதியாக அலையும் எங்கள்
அவலம் என்று தீரும்
இழந்த வாழ்வை மீண்டும் காணும்
இனிய காலம் தோன்றுமா....?
இமைகள் மூடி உறங்க இங்கே
அமைதி ஒளி வீசுமா...?

(நிலவு காயும்...)

போரில்லாத உலகம் காண
போதனைகள் புரிவார்
ஊரில்லாமல் உலவும் எங்கள்
உரிமை தன்னை மறுப்பார்
வேதனைதான் தொடர் கதையோ
வேண்டும் வரம் கிடைக்காதோ....

(நிலவு காயும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி நிலவிட

**பல்லவி**

அமைதித் தென்றல் அகிலம் வீச
சிறகை விரிக்கும் வெண்புறா
இமைகள் திறந்து ஒளியைக் காண
இருளை விலக்கும் வெண்ணிலா (அமைதி...)

**சரணம்**

குருதி சிந்தி குடிகள் மடிய
குவியும் உடல்கள் மண்ணிலே
இனியும் இங்கு இல்லை என்று
இறங்கிவந்த வெண்புறா.... (அமைதி...)

புரிந்து வாழும் உணர்வைக் காட்டி
புவியில் வாழ்வோம் புகழுடன்
மறைந்து போன மனிதநேயம்
மலரச் செய்வோம் மண்ணிலே... (அமைதி...)

மலரும் மணமும் போல வாழ்ந்து
மகிழ்வைக் காண்போம் நாமிங்கே
பலரும் வாழ்த்த பண்பாய் நடந்து
பதிப்போம் தடம் பாரிலே..... (அமைதி...)

வன்முறைகள் மறைந்த காலம்
வளங்கள் பெருகி வளர்ந்திட
இன்பமான நாட்டைக் காண
இதயம் இன்று ஏங்குதே.... (அமைதி...)

சகலருமே அமைதியுடன்
சமரசமாய் வாழ்ந்திட
ஒற்றுமையை உருவாக்கி
ஒன்று சேர்வோம் உலகிலே (அமைதி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துப்பு

**பல்லவி**

பனிதூவும் காலையிலே
பகலவன் உதிக்கும் முன்னே
படகேறிக் கடல்மீது
தலைமறைந்து போற மச்சான்
கரையோரம் காத்திருப்பேன் காணும்வரை
தனியாய்த் தவித்திருப்பேன் நானுமிங்கே...

(பனிதூவும்...)

**சரணம்**

காற்று மழை வெயிலினிலும்
கடலன்னை மடியினிலே
கண்விழித்து மீன்பிடித்தும் மீட்சியில்லை
கரைசேர வழியேதும் காணவில்லை
கவலைகள் பெருகிடவே
காலமிங்கு கரைகிறதே கண்ணீரில்
எங்கள் வாழ்வு வளம் பெறவில்லையே
மண்மீதில்... (பனிதூவும்...)

காலையிலே போகும் மச்சான்
மாலை வீடு மீளும் வரை
அமைதியினை இழந்து நானும் கரையிலே...
அனல் மேல் புழுவாகத் துடிக்கிறேன்...
அந்த ஆண்டவனை
மனதில் எண்ணித் துதிக்கிறேன்...
வாளை சுறா மீன்களுடன்
வாசலிலே உங்கள் முகம்
கண்டதும் உள்ளம் களிக்கிறேன்...

(பனிதூவும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்டு இறால் கறிசமைத்து
துண்டு மீன்கள் பொரியல் வைத்து
உண்டிடவே பார்த்திருப்பேன் பக்கத்திலே...
உங்கள் அன்பு முகம் ரசித்திருப்பேன் வெட்கத்திலே...
இது போல் உள்ளத்திலே
எத்தனையோ கற்பனைகள்
அத்தனையும் அனுபவிக்க
அவசரமாய் வாங்க மச்சான் அந்தியிலே...

(பனிதூவும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மைகள் புரிவோம்

**பல்லவி**

உண்மை என்றும் அழிவதில்லை.....
உலகில் தீமை வாழ்வதில்லை......
புன்மை புரிவோர் ஒழிந்திடவே
புதிய பொழுதாய் புலர்ந்திங்கே
நன்மை செய்தே நாளும்
நலமுடன் வாழ்வோம் நாமும்!
(உண்மை...)

**சரணம்**

புனிதர் பலரின் போதனையில்
புண்ணியம் பலவும் புரிந்துநாம்
பணிவு பண்பு பாசமுடன்
பலரும் போற்றப் பாரினிலே
நன்மைகள் செய்தே நாளும்
நலமுடன் வாழ்வோம் நாமும்!
(உண்மை...)

இன மத பேதம் உரைத்திங்கே
உறவைப் பிரித்து வைப்போரும்
உள்ளம் மாற்றம் பெற்றிங்கு
உயர்வாய் வாழும் வழிகாண

நன்மைகள் செய்தே நாளும்
நலமுடன் வாழ்வோம் நாமும்!
(உண்மை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய நாட்டின் தலைவரென
நாவால் உரைப்பதில் பயனில்லை
தோளை உயர்த்தி துணிவுடனே
தீமைகள் தடுக்க ஓரணியாய்
நன்மைகள் செய்தே நாளும்
நலமுடன் வாழ்வோம் நாமும்!
(உண்மை...)

நல்லவர் போல வேஷமிட்டு
நடித்து திரியும் நரிகளினை
எல்லா மக்களின் முன்னாலே
எடுத்துக் காட்டி தோலுரித்து
நன்மைகள் செய்தே நாளும்
நலமுடன் வாழ்வோம் நாமும்!
(உண்மை...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலைப் பேணுவோம்

**பல்லவி**

பூங்காற்று உடல் தழுவ
பொங்கும் புனல் இதமூட்ட
பூத்து வரும் நல்ல சூழலிலே
பூமி எங்கும் இன்பம் பெருகிடுமே!
வளர்ப்போம்! வளர்ப்போம்!
வகை வகை மரங்கள்
வாழ்வோம்! வாழ்வோம்!
வளமுடன் நாமும்.

(பூங்காற்று)

**சரணம்**

தேடித் தேடியே
செல்வங்கள் சேர்த்தோம்
கேடில்லாத சூழலில் வாழ
வழிகளைக் கண்டோமோ...?
நல்ல நீரும் காற்றும்
நாளும் கிடைக்க
இல்லங்கள் அமைத்தோமா....
இதன் நன்மைகள் அறிந்தோமா....

(பூங்காற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலின் வெப்பம்
பனிபோல் மறைய
பச்சை மரங்களும்
பசுமை தருமே
அடர்ந்த நிழலினை
அனைவரும் பெறவே
நடுவோம் மரங்களையே
நாம் வாழ்வோம் நலமுடனே...

(பூங்காற்று)

நித்தம் எங்கள் சூழலினை
சுத்தம் பேணிக் காத்திடுவோம்!
குப்பை கூலங்கள் பெருகாமல்
குடிமனைகளை நாம் அமைத்திடுவோம்!
உன்னதமான உடலினையே
உவப்பாய் கருதி எந்நாளும்
தூய்மை வழியில் வாழ்ந்திங்கு
துயரில்லாமல் மகிழ்ந்திடுவோம்.

(பூங்காற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீட்டு செல்லப் பூனை

**பல்லவி**

எங்கள் வீட்டில் ஒரு பூனை
அங்கும் இங்கும் ஓடிடுமாம்!
தொங்கும் கயிற்றின் மீதேறி
தூங்கி விளை யாடிடுமாம்!

(எங்கள்...)

**சரணம்**

பசித்தால் வந்து பக்கத்தில்
பாவம் போல பார்த்திடுமாம்
குசினிக் கதவைத் திறந்திட்டால்
குதித்துப் பாய்ந்து நுழைந்திடுமாம்!

(எங்கள்...)

எலியைக் கண்டால் எழுந்தோடி
புலிபோல் பாய்ந்து பிடித்திடுமாம்
வலிமைமிக்க பல்லாலே
கிழித்துக்குதறி கடித்திடுமாம்! (எங்கள்...)

பளிங்கு போன்ற கண்ணாலே
பயமுறுத்திப் பார்த்திடுமாம்
அடிக்கத் தடியை எடுத்தாலே
பதுங்கிப் பாய்ந்து ஓடிடுமாம்! (எங்கள்...)

பஞ்சு போன்ற மயிர்களினால்
படர்ந்திருக்கும் உடலினையே
அஞ்சு விரலால் தொட்டிட்டால்
பட்டுப்போல் இருந்திடுமே! (எங்கள்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியாவிடைப் பாடல்

**பல்லவி**

கலை நிலமே - எங்கள்
கல்வி வனமே
கண்ணீர் சிந்திப் போகின்றோம்
நந்தவனமாய் உன்னை
நெஞ்சில் நினைத்து - எங்கும்
நட்புவிதைகள் நாம் விதைத்து வைத்தோம்.....
(கலை நிலமே...)

**சரணம்**

விரைந்து போன இந்த நாட்களிலே
விரிந்து வளர்ந்ததெங்கள் உறவுகளே
கரைந்து போகும் கனவாய் மாற
பிரிந்து போகின்றோம் நண்பர்களே.....
(கலை நிலமே...)

தஞ்சமென நாமுமுன்னை நாடி வந்தே
வஞ்சமின்றி அறிவைத் தேடி நின்றோம்
பஞ்சமின்றி நட்பு மலர் பல பறித்தோம்
அஞ்சலியாய் இன்று அதை தூவுகின்றோம்.....
(கலை நிலமே...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீண்டும் செயல்களும் வலிக்கவில்லை
சீற்றம் கொண்டதும் நினைவிலில்லை
உற்ற உறவு போல் உதவி வந்தோம்
உதறி யாவையும் பிரிகின்றோம்....
(கலை நிலமே...)

பலகதைகள் பேசி தினம் படுத்திடுவோம்
பாசமுடன் தேனீர் போட்டு எழுப்பிடுவோம்
நேசமுடன் உறவாடி நேரமெல்லாம் இசைபாடி
நேற்று நடந்த கதை நாளையும் தொடர்ந்திடுமா....?
(கலை நிலமே...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்த்திரு நாடு

**பல்லவி**

நீர் வளமும் நில வளமும்
நிறைந்த நந்நாடு
நீண்ட மகா வலிகங்கை
பாய்ந்திடும் நாடு! (நீர் வளமும்....)

**அனுபல்லவி**

இணைந்து மக்கள் இனிதாக
இருந்திடும் நாடு!
இலங்கை என்னும் பெயருடனே
இலங்கிடும் நாடு!

**சரணம்**

செந்நெல்லும் தேயிலையும்
செழித்து வளர்ந்திடும்!
செங்கரும்பு தோட்டம் பல
இனிப்பை வழங்கிடும்!
ஏலம் கறுவா கம கமக்க
ஏற்றி அனுப்பியே
ஏராளம் செல்வத்தை
இறக்கி தந்திடும்! (நீர் வளமும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீந்தமிழும் சிங்களமும்
சேர்ந்து ஒலித்திட
தீயோர்கள் பயமின்றி
நாட்கள் நகர்ந்திடும்!
சாதி மத பேதமின்றி
சாந்தி நிலவிட
சாற்றும் மறை போதங்களைப்
போற்றிடும் நாடு!

(நீர் வளமும்....)

சிகிரியாவின் சித்திரங்கள்
சிறப்பைத் தந்திட
சிற்பங்கள் சிகரங்கள்
செறிந்த கலை நாடு
எழில் கொஞ்சும் மலைநாடு
உள்ளம் கவர்ந்திடும்....
பசுமை படர்ந்த இடங்களையே
பார்த்து மகிழ்ந்திட
அழகான பாதை பாலம்
அமைந்த வளநாடு!

(நீர் வளமும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரம் ஒரு வரம்

**பல்லவி**

மண்ணில் வளங்கள் மரங்கள் - அவை
மனிதருக்குப் பெரும் வரங்கள்
காணிகள் தோறும் வைத்து - அதை
பேணி வளர்ப்போம் காத்து!

(மண்ணில்....)

**சரணம்**

தென்றல் காற்றில் தலை சீவும்
தென்னை இளநீர் தந்திடுமே
நன்றாய் வளர்த்த மா பலாவும்
நறுங்கனியோடு நமக்கெல்லாம்
குன்றாய்க் குவிந்து முற்றத்தில்
குளிர்ந்த நிழலைத் தான்தருமே!

(மண்ணில்....)

பச்சை இலையால் உடல்மூடி
பசுமை எங்கும் படர்ந்துதிடவே
பாரினை எழிலாய் மாற்றிடுமே
பறவைகள் வசிக்க இடம் தந்து
பழங்களும் புசிக்கக் கொடுத்திடுமே
இறந்த பின்னாலும் விறகாய் எரிந்து
உதவிடும் மரமே நீ வரமே!

(மண்ணில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களை அழித்தால்
மழை குறையும்
மண்ணும் வரண்டு வளம்குறையும்
தண்ணீர் இன்றி உயிர்யாவும்
தாகத்தினாலே தவித்துவிடும்
தருவினை வளர்த்து
தலைமுறை காப்போம்
பாரினில் பசுமை
பரவிடச் செய்வோம் நாமே!

(மண்ணில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேயிலை பறிக்கும் பெண்ணே

**பல்லவி**

பனிப்புகையும் படர்ந்திருக்கும்
பச்சை இலை செடிகளிலே
தழுவுது பார் மேகம் வந்து
தாவுது பார் நதியும் அங்கே..... (பனிப்புகை...)

**சரணம்**

காலை இளங் கதிர்பரவி
காரிருளை விரட்டும் முன்னே
தோளினிலே கூடை தூக்கி
தேயிலையைப் பறித்திடவே - தினம்
தேகம் நடுங்கும் குளிரினிலே
வேகமாகப் போகும் பெண்ணே....(பனிப்புகை...)

அழகான காட்சி எல்லாம்
அனுபவிக்கும் ஆசை இன்றி
மடுவத்திலே மகனை விட்டு
மலை ஏறிப்பிழைக்கும் பெண்ணே - நீ
மனை திரும்பும் கவலையிலே
மனம் விரும்பி ரசிப்பாயோ.... (பனிப்புகை...)

மண்ணில் நிமிர்ந்து நிற்கும்
மலை மீது வளர்ந்திருக்கும்
நம் நாட்டு வளம் பெருக்கி
நலன் சேர்க்கும் தேயிலையின்
நுனிக் கொழுந்தைப் பறித்திடவே
அணி அணியாய் போகும் பெண்ணே....
(பனிப்புகை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் வளர்த்திட

**பல்லவி**

மனித நேயம் மண்ணில் மலர
புனிதர் வழியில் நாம் நடப்போம்
இனிய காலம் கண்டிடவே - இங்கே
இணைந்து ஒன்றாய் வாழ்ந்திடுவோம். (மனித....)

**சரணம்**

மற்றோர் உணர்வை மதிக்கின்ற
மனதால் உறவை வளர்த்திடுவோம்
உற்றோர் போல அனைவரையும்
உவந்தே உள்ளம் ஏற்றிடுவோம்
பற்று பாசம் பண்புடனே
பதியில் மனிதம் போற்றிடுவோம்.! (மனித....)

சாதி பேதம் இனமென்று
சாற்றிப் பேசி சண்டையிட்டு
நாதி யின்றி நாவாலே
நாளும் பேதம் வளர்த்திங்கு
மோதி முட்டி வாழ்வதனால்
மாண்புடன் மனிதம் வளர்ந்திடுமா? (மனித....)

கண்ணை மறைக்கும் கோபத்தாலே
கண்ணீர் சிந்தும் நிலை விட்டு
மன்னிக்கின்ற மனப் பாங்கை
மனதில் ஏற்று எல்லோரும்
புன்னகை சிந்தி புரிந்துணர்வோடு
புலரச் செய்வோம் மனிதத்தை.... (மனித....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுது தேடி அலையும் உள்ளம்

**பல்லவி**

திங்கள் வரவில் காரிருள் மறையும்
திசையினைப் பார்த்திருந்தேன் - அங்கே
காலத்தை மறந்திருந்தேன். (திங்கள்.....)

**சரணம்**

எண்ணங்கள் எங்கெங்கோ பறந்து செல்ல
ஏக்கத்தில் உள்ளம் உருகிடவே
கண்ணில் துயரம் தேங்கி நிற்க
தூக்கமும் இழந்தேன் நானுமிங்கே
நிம்மதி தேடி அலையும் எந்தன்
நிலையும் மாறாதோ
வேதனை தீராதோ...... (திங்கள்.....)

கார்முகிலாக சோகங்கள் சூழ்ந்து
கண்ணீர் வெள்ளம் பெருகி ஓட
வாழ்வே மூழ்கிடுமோ...
வசந்தம் முடிந்திடுமோ...
இனிவரும் காலம் இருளும் நீங்கி
விடிவும் தோன்றா தோ
என் இதயம் மகிழாதோ... (திங்கள்.....)

வானத்தைப் பார்த்தேன்
வாவென விழியால் அழைக்கின்றாய்
நானுன்னை நெருங்க
நாணத்தில் குனிந்து
புன்னகை பூக்கின்றாய்
அழகே உன்னை - அணைத்திட வந்தேன்
விலகினாய் நீயும்
விழித்தேன் நானும்
கனவே வாழ்க்கை இங்கே... (திங்கள்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் பெருமை

**பல்லவி**

பெண்கள் என்பதே பெருமை - நாம்
பெரிதாய் மதித்தால் நன்மை!
உலகின் கண்கள் பெண்கள் - இதை
உணர்வோம் அதுவே உண்மை! (பெண்கள்....)

**சரணம்**

தாய்மை தாரம் என்றே நன்றாய்
தாரணி போற்றிடுமே....
வாய்மை வீரம் வழியினில் வாழும்
பெண்களைத் தூற்றிடுமே....
உயிரை வளர்த்திட உதிரம் வழங்கி
உதவிடும் தாய்க்குலமே
அவர் தியாகத்தின் இருப்பிடமே... (பெண்கள்....)

அன்பு பாசம் அனைத்தும் தருவது
அன்னையின் இதயமடா
அவர் காலடியின் கீழ்
சொர்க்கம் உண்டெனச்
சொன்னார் நபிகளடா....
அனுதினம் அவரின்
அடிதனைத் தொழுதல்
அவசியக் கடமையடா... (பெண்கள்....)

கணவன் பிள்ளை உற்றார் உறவென
கூடி வாழ்வதும் பெண்ணாலே
குடும்பம் என்ற கோட்டையைக் காத்து
கட்டி ஆள்வதும் அவள்தானே....
பெண்ணின் பெருமையைப்
பெரிதென போற்றிட
வேறென்ன வேண்டுமடா....? (பெண்கள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப் பயணம்

**பல்லவி**

வளர்ந்து தேயும் பிறையைப் போல
வந்து போகும் வாழ்க்கை இது
வானில் தோன்றும் வானவில் போல
மனதை மயக்கி
மறைந்து போகும் யாவுமிங்கே....
(வளர்ந்து...)

**சரணம்**

ஒரு நாள் பொழுதில்
இரவும் பகலும்
இரண்டும் சேர்ந்திருக்கும்...
இன்பம் துன்பம் இரண்டுமிங்கு
வாழ்வில் ஒன்றாய் இணைந்திருக்கும்...
இருளும் ஒளியும் மாறி மாறி வரும்
வாழ்க்கைப் பயணத்திலே...
(வளர்ந்து...)

பொழுதும் விடியும புதுநாளாய்
பொருளும் குவிந்திருந்தால்...
விழுந்தால் தூக்கிட
விரைந்து வருவார் ஆயிரம் பேரிங்கே...
அழுதாழும் ஆறுதல் கூறி
அணைத்திட பலரிங்கே...
ஏழையின் வாழ்வில்
எது நடந்தாலும்
ஏன் என்று கேட்பார் யாருமில்லை...
(வளர்ந்து...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமழை

**பல்லவி**

முத்து முத்தாய் உதிர்ந்து விழும்
மழைத்துளி வந்து
முத்தமிட்டு நித்திலத்தை
நிறைத்ததே நீரால்.
(முத்து...)

**சரணம்**

கருமுகில்கள் ககனம் கூடி
காற்றில் அலையுதே...
பெரும் புயலும் இடியும் வந்து
பயத்தையூட்டுதே...
விழும் மின்னல் கீற்றிலே
விழிகள் மூடிட
வான் மழையும் வாசலிலே
வந்து பொழியுதே...
(முத்து....)

முற்றமெல்லாம் மழை நீரில்
மூழ்கி நிறைந்திட
சத்தமிட்டு தவளைகளும்
தாவிப் பாயுதே...
பத்திரமாய் விலங்குகளும்
பதுங்கி ஒதுங்கிட
சோ வென்ற இரைச்சலுடன்
மழையும் சொரியுதே...
(முத்து....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லவி**

பிள்ளைச் செல்வமே
கொள்ளை இன்பமே!
நீ இல்லம் வந்ததால்
இனி இல்லை துன்பமே! (பிள்ளை....)

**சரணம்**

புதிதாய் நீயும் வந்தாயே
புன்னகை ஒன்று பொழிந்தாயே
மந்திரம் ஏதும் செய்தாயோ
மயங்கி நானும் போனேனே... (பிள்ளை....)

பிறந்தாய் மண்ணில் ஒருநாளே
விழிகள் திறந்தாய் திருநாளே
மழலை பொழிந்தாய் பெருநாளே
ஒவ்வொரு நாளும் நந்நாளே... (பிள்ளை....)

அம்மா என்று அழைக்கின்ற
அமுத மொழியில் குளிர்ந்தேனே
அழுதால் நானும் அருகில் வந்து
அணைத்தே ஆறுதல் தருவேனே...(பிள்ளை....)

முத்துக் கன்னம் மீதினிலே
முத்த மழையைப் பொழிந்திடுவேன்
தத்தித் தத்தி நடக்கையிலே
தாவிப் பிடித்தே தூக்கிடுவேன்... (பிள்ளை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசான்

**பல்லவி**

எண்ணும் எழுத்தும் எடுத்தோதி
ஏணியாய் இருந்து ஏற்றி விட்டவர்
உலகில் நாமும் உயர்ந்திடவே
தினமும் மெழுகாய் உருகியவர் (எண்ணும்...)

**சரணம்**

அகரம் என்ற அறிவினையே
அடித்தும் அழித்தும் உணர்த்தியவர்
பகரமாக நாம் இதற்கு
பகிர்ந்திட பாரில் ஏதுமில்லை
உயரம் தொட்டு நாம் வாழ
உதவிய உத்தமர் வாழியவே! (எண்ணும்...)

கல்வியோடு கலை பலவும்
கற்றுத் தேர்ந்து காசினியில்
வல்லவராக வாழ்ந்திடவே
வழியைக் காட்டிய ஒளிவிளக்கு
நல்ல ஆசான் உங்களையே
நாளும் உள்ள மறவோமே! (எண்ணும்...)

அழுக்கை மனதில் அகற்றிடவே
ஒழுக்கம் ஓர்மை ஊட்டியவர்
விழுந்தால் எழும்பி நிமிர்ந்துடவே
வீரக்கதைகள் விதைத் தென்றும்
உரமாய் எமக்கு உழைத்தவரே
உம்மை வாழ்த்திப் போற்றுகிறோம்... (எண்ணும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெண்ணிலா...

**பல்லவி**

வானத்தில் வலம் வரும் வட்ட நிலா!
வாசலில் வந்திடும் வண்ண நிலா!
நாணத்தில் ஒழிந்திட நாடும் நிலா!
நாளும் வளர்ந்து தேயும் நிலா!
(வானத்தில்....)

**சரணம்**

கவிதைகள் தந்திடும் கன்னி நிலா!
கலைகள் காவியம் கண்ட நிலா!
புவியில் புலரும் புதுநிலா!
புன்னகை பூத்திடும் பூ நிலா!
விண்ணில் தோன்றிடும் வெண்ணிலா!
விடிந்தால் மறையும் வெள்ளிநிலா!
(வானத்தில்....)

ஏழைகள் இல்லத்தில் எழில் நிலா!
ஏற்ற இறக்கங்கள் அற்ற நிலா!
உழைப்போர் வாழ்வில் ஒளி நிலா!
உறங்க வைத்திடும் குளிர் நிலா!
பாலைவனத்தில் பால் நிலா!
பாவையர் கனவில் பாடும் நிலா!
(வானத்தில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறை வடிவாகப் பிறந்த நிலா!
பின் னிரவினில் பிரியும் நிலா!
கறை படிந்தும் முழு நிலா!
குறை யில்லாத நிறை நிலா!
நாணத்தில் ஒழிந்திட நாடும் நிலா!
நாளும் வளர்ந்து தேயும் நிலா!

(வானத்தில்....)

உலகம் உவக்க உயர்ந்த நிலா!
உணர்வை ஊட்டி எழும் நிலா!
மலர்கள் மயக்கும் மாலை நிலா!
மண்ணில் ஒளியை வீசும் நிலா!
பலரும் விரும்பும் பால் நிலா!
பறந்து என்னிடம் வா நிலா!

(வானத்தில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் வரும் நாள்

**பல்லவி**

மரணம் உனக்கும் உண்டென்று
மனிதா உணர மறந்தாயோ!
இனிதாய் தெரியும் இவ்வுலகை
இழப்பாய் ஒருநாள் மறவாதே! (மரணம்....)

**சரணம்**

சொத்து சுகங்கள் பெற்றே நீ
சொந்த பந்தம் சூழ்ந்திடவே
நித்திலம் மீதில் நிறைவாக
நிம்மதியாக எந்நாளும்
பத்திரமாக இருந்தாலும்
பட்டெனப் பிரியும் உயிர் ஒரு நாள்!
(மரணம்....)

மனைவி மக்கள் மனம்மகிழ
மரத்தின் நிழலாய் நீயிருந்தும்
அணையும் சுடராய் உன் உயிரும்
அகன்று மறையும் அந்நாளில்
துணையாய் யாரும் இல்லாமல்
துயில்வாய் தனியாய் மண்ணறையில்!
(மரணம்....)

மாடி மனைகளில் மகிழ்வோரும்
மாடாய் உழைத்து மாழ்வோரும்
ஆடிப் பாடிக் களிப்போரும்
ஆசை துறந்து அலைவோரும்
கூடி ஒன்றாய் இறுதியிலே
கூடும் இடம் சுடு காடாகும்! (மரணம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லவி**

ஆண்: பொன் வண்டு பாடும் சோலை - ஒரு
பெண் வந்து ஆடுதே....
பெண்: மான் துள்ளி ஓடும் சோலை- வண்ண
மயில்கள் ஆடுதே...
(பொன் வண்டு....)

**சரணம்**

ஆண்: தேன் சிந்தும் மலர்கள் தேடி - வந்து
அமர்ந்து அருந்தும் தேனீ
பெண்: வான் சிந்தும் மழையில் நனைந்து - மலர்
மறைந்து ஒதுங்கும் இலையில்
ஆண்: இளம்தென்றல் இதமாய் வீச
இமை மெல்ல மயங்கி மூடும்
பெண்: நதி ஓரம் மீன்கள் துள்ள
நம் இதயம் மகிழ்வு கொள்ள
(பொன் வண்டு....)

ஆண்: மடிமீது தலையைச் சாய்த்து
மதிவதனம் பார்க்கும்போது...
பெண்: மறுபாதியாகி நானும்
முகம் பதித்து மார்பில் துயில்வேன்
ஆண்: மாங்கனிகள் சுமந்த கன்னம்
மான் விழியே சுவைக்கலாமோ...?
பெண்: வண்ணம் பூசும் வார்த்தை பேசி
வரம் கேட்டு நிற்கலாமோ...
(பொன் வண்டு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் : இன்னும் என்ன வேண்டும் இங்கே - நம்
இதயம் கலந்த பின்னே
பெண் : இரு கரங்கள் இணைய நாமும்
திரு நாளைக் காணலாமே
இருவரும் : இதயம் இணைந்த பின்னே- இனி
பிரிவு இல்லை நாளும்
உதயம் கண்டு நாமும்
உள்ளம் மகிழ்வோம் வாழ்வில்..
(பொன் வண்டு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை

**பல்லவி**

கவிதைகள் காவியம் பாடி
கவிஞரானவர் கோடி
நாட்டு மக்களின் நலம் நாடி - இங்கு
பாட்டுக் கட்டியோர் யாரு...
எங்கள் பட்டுக்கோட்டைதான் கூறு...
(கவிதைகள்....)

**சரணம்**

கல்யாண சுந்தரம்
கவிஞர் என்றதும்
பட்டுக்கோட்டைதான்
பட்டென தெரிகிறதே...
உன்னால் உந்தன்
ஊரின் பெயரும்
உலகெங்கும் ஒலிக்கிறதே...

சுரண்டி வாழ்வோரை
சுட்டு எரித்திடும்
சுடர் கவிதைகளின்
சொந்தக்காரன் நீ...
எங்கள் மனதில் வாழும்
மக்கள் கவிஞன் நீ...
(கவிதைகள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை மக்கள்
ஏற்றம் காணவே
எழுச்சிக் கீதங்கள்
எழுதிப் படைத்தவன்...

கோழையாய் வாழ்வோர்
தோளை நிமிர்த்திட
நாளை நமதென
நம்பிக்கையூட்டி
நல்ல பாடல்கள்
பாடி வைத்தவன்...

(கவிதைகள்...)

பட்டுக்கோட்டையின்
பாடலைப் பாடி
பதவிகள் பெற்றவர் பலருண்டு
துட்டு கொடுக்காமல்
பாட்டை வாங்கி
பணத்தைச் சேர்த்தவர் சிலருண்டு...

வறுமையில் நாளும் அலைந்தே
வாழ்வை இளமையில் இழந்தாய்
புதுமைகள் புரிந்த புரட்சிக் கவிஞனே
புவியில் என்றும்
புகழுடன் வாழும் உன்நாமம்...

(கவிதைகள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிந்தெழுந்திடு

**பல்லவி**

வீரம் விளைந்த மண்ணில் பிறந்தோம்
வெற்றிப்படிகள் ஏறிக் கடந்தோம்
தீரமிக்க தலைமுறை நாமே
தீமைகள் எதிர்க்க துணிந்து வா....
(வீரம்....)

**சரணம்**

ஆண்டவன் அருளால்
அவனியில் பிறந்தோம்...
அன்னையின் மடியில்
ஆளாகி வளர்ந்தோம்...
அகரம் அறிந்தோம்
அறிவினைப் பெற்றோம்...
அநியாயங்களை அழித்திட வந்தோம்...
இடர்கள் வரினும் இலட்சியம் காப்போம்...
எழுந்து நில்.....
(வீரம்....)

பொல்லார் கொடுஞ்செயல்
பொறுத்திட மாட்டோம்...
இல்லார்க் குதவிடும்
இதயம் பெறுவோம்
நல்லோர் வாழ்ந்திடும்
நானிலம் படைப்போம்....
நாட்டைக் காத்திட
நம் உயிர் கொடுப்போம்...
எட்டுத் திக்கும் என் பணி தொடர
எழுந்து வா...... (வீரம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிரம் சிந்தி
உழைக்கும் வர்க்கம்
உரிமைகள் பெற்று
உயர்ந்திட வேண்டும்...
அடிமைப் பட்டே
அவதியில் வாழ்வோர்
சுதந்திரக் காற்றில்
சுகம் பெற வேண்டும்
புதுமைகள் புரிவோம்
புறப்படு நீயும்...

(வீரம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை கொள்

**பல்லவி**

மறையும் பொழுதும்
மறுநாள் புலரும்
இயற்கை வகுத்த வழி!
மனதின் கவலைகள்
மாறிடும் ஒருநாள்
நம்பிக்கை புகட்டும் வழி!

**சரணம்**

பூத்துக் குலுங்கும்
பூக்களும் ஒரு நாள்
வீழ்ந்திடும் புழுதியிலே!
மாடியில் மகிழ்பவர்
விதியின் சதியால்
வீதிக்கு வருவதுண்டு
மாற்றங்கள் உலகில்
மாறி மாறி வரும்
நம்பிக்கை தளராதே! (மறையும்....)

காலம் முழுவதும்
கண்ணீர் சிந்தி
வாழ்பவர் பலருண்டு கவலைகளுடனே
அலைபவர் உலகில்
ஆயிரம் பேருண்டு
அதை எதிர்த்து வென்று
எழுந்து நிற்பவர்
மண்ணில் நிலைப்பதுண்டு
இதை மனதில் நீ கொள்ளு... (மறையும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னப் பாப்பா

**பல்லவி**

கன்னத்திலே குழி விழவே
கலகலவென சிரித்திடுவாள்
சின்னப் பாப்பா.....
அன்னம் போல நடை நடந்து
அழகு காட்டி வந்து நிற்பாள்!
சின்னப் பாப்பா - எங்கள்
செல்லப் பாப்பா

**சரணம்**

மினுமினுக்கும் சட்டை போட்டு
மிடுக்காக நடை போட்டு
கொழுபொம்மை போல நின்று
கைகொட்டிச் சிரித்திடுவாள்!
சின்னப் பாப்பா - எங்கள்
செல்லப் பாப்பா

அமுதூட்ட அம்மா அழைத்தாள்
அடம்பிடித்து அழுதிடுவாள்!
அணைத்தெடுத்துத் தூக்கிட்டால்
அல்லி முகம் மலர்ந்திடுவாள்!
சின்னப் பாப்பா - எங்கள்
செல்லப் பாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட்டாய் வாங்கிக் கொடுத்திட்டால்
மிக்க மகிழ் வாகிடுவாள்
சட்டைப் பையில் கையை விட்டு
துட்டைத் தேடி எடுத்திடுவாள்!
சின்னப் பாப்பா - எங்கள்
செல்லப் பாப்பா

முத்தம் ஒன்று கேட்டிட்டால்
முகத்தினிலே முகம் பதிப்பாள்
பத்து விரல் பொத்தி நமக்கு
குத்து ஒன்று தந்திடுவாள்!
சின்னப் பாப்பா - எங்கள்
செல்லப் பாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லவி**

கவிதைகள் கற்று
கவிஞனானவன் நானல்ல.....
நாட்டினில் நடப்பதை
ஏட்டினில் எழுதி
பாட்டினைப் படைக்கும்
பாவலன் நான்.....

(கவிதைகள்...)

**சரணம்**

பேனாக் கழப்பையை எடுப்பேன்
மனித மனங்களை உழுவேன்...
அறிவு விதைகளை விதைத்து
உணர்வு நீரூற்றி வளர்ப்பேன்....
இளமை பயிர்களும்
எழுச்சி பெற்றிட
இடர் களைகளை அழிப்பேன் - இதை
எழுதிக் கவிதையாய் வடிப்பேன்...

(கவிதைகள்...)

பொய்யும் புரட்டும்
புரிந்து பதவிகளை
பெற்று வாழ்பவர் புனிதர்களாக.....
காற்று மழையிலும்
உழைப்பவர் இங்கு பதர்களாக.....
மக்கள் வரிப் பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டி எடுப்போர்
சுகத்தில் வாழும் யுகம் மாற
புதுக்கவி எழுதி
புதுமைகள் படைத்திடுவேன்....
(கவிதைகள்...)

ஊழல்கள் செய்து
ஊரை ஏமாற்றி
உத்தமராக உலவுவோர் பலருண்டு
குறுக்கு வழியினில்
பணத்தைப் பெருக்கி
உயர்ந்தோர் பலரும் இங்குண்டு
நாட்டு வளங்களை நாசமாக்கிடும்
நச்சுக் களைகளை நசுக்கி
நல்லகருத்தினை
சொல்லும் கவிதைகளை
மக்கள் மனதிலே பதிப்பேன்...
(கவிதைகள்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணமே பணமே

**பல்லவி**

உலகம் சுழல்வது பணத்தாலே
உயிர்கள் வாழ்வது அதனாலே
உறவுகள் இணைவதும் பணத்தாலே
உள்ளங்கள் பிரிவதும் அதனாலே!
(உலகம்....)

**சரணம்**

புகழைத் தருவதும் பணம்தான்
புத்தியைக் கெடுப்பதும் பணம்தான்
மனிதனின் ஆசையைத் தீர்க்கும்
புனிதனாய் அவனையும் போற்றும்
பணத்துக்கு நிகரே பணம் தான்
பணமில்லை என்றால் பிணம்தான்!(உலகம்....)

ஓடி ஓடி உழைப்பவன் கூட
ஒரு பிடிச் சோற்றை உண்டிடவே
தேடிட வேண்டும் பணம்தான்
ஆடிப்பாடி நடிப்பவன் கூட
ஆசைப்படுவதும் பணம்தான்
அரசியலினிலே அடிவைப்பவரையும்
அடிமையாக்குவது பணம்தான்! (உலகம்....)

திினம் தினம் மாறி
திசை எங்கும் ஓடி
திரும்பவும் வருகின்ற பணமே
நீ இருந்தாலும் ஒரு பயமே...
இல்லை என்றாலும் துயரே...
என்ன செய்யும் இந்த மனமே
எல்லாமே இங்கு பணம்தானே! (உலகம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதின் விரக்தி

**பல்லவி**

ஏதோ மண்ணில் பிறந்து விட்டோம் -இதை
நானோ நீயோ கேட்கவில்லை...
ஏனோ இன்னும் இவ்வுலகம்
எதையும் இதயம் ஏற்கவில்லை...
(ஏதோ....)

**சரணம்**

கானல் நீரைக் கண்கள் நம்பும்
காட்சியின் கோலமடா!
நாளை உலகை நம்பிக்கை கொள்வது
ஏழைகள் உள்ளமடா!
ஒருவரின் வாழ்வில் ஒளியினை ஏற்றிட
பலரின் உழைப்பு எரியுதடா!
இது நீதியா...?
இல்லை தலைவிதியா...?
(ஏதோ....)

மற்றவர் மானம் பறித்திடும் செயலை
மிருகங்கள் கூட செய்வதில்லை...
உற்றார் என்றே உறவு கொள்வோரும்
உதவிட என்றும் வருவதில்லை...
கற்றவர் கூட காசு என்றால்
கண்ணியம் காப்பதில்லை...
சொந்தம் பந்தம் யாவும் இந்த
சொத்தின் முன்னால் தூசடா....
(ஏதோ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளோருக்கும் இல்லா தோர்க்கும்
உலகம் ஒன்றுதான்
உதிக்கும் கதிரோன் வீசும் ஒளியும்
எங்கும் ஒன்றுதான்
மனிதர் மனங்கள் மட்டும் ஏனோ
வேறு வேறுதான்
தொல்லை இல்லாத பிள்ளைப் பருவம்
கொள்ளை இன்பம் தான்....

(ஏதோ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் துயர்

**பல்லவி**

வெண்பஞ்சு மேகங்கள்
விண்ணில் மிதந்திடும்
வெண்மதி வானில்
வெளிச்சம் வீசிடும்
கண் துஞ்சும் வேளையிலே
பல கற்பனை தோன்றியதே...

(வெண்பஞ்சு....)

**சரணம்**

அஞ்சு விரல் பற்றி
வஞ்சி உடல் சுற்றி
கொஞ்சி மகிழ்ந்திடவே
உள்ளம் தஞ்சமடைகிறதே...
நேரமாகிக் காத்திருந்தும்
நீ வரவில்லையே
நெஞ்சம் நினைத்து ஏங்குதே....

(வெண்பஞ்சு....)

மல்லிகை வாசம்
எங்கும் நிறைந்திடும்...
மலரும் பூக்கள்
மண்ணில் சொரிந்திடும்...
மாலை நேர மையலிலே
மனதும் மயங்குதே...
கண்கள் தேடி அலையுதே.....

(வெண்பஞ்சு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி மாலையில்
மறையும் பொழுதிலே
சொந்தமான உறவிருந்தும்
அருகில் இல்லையே....
நீ விலகி நின்றது போதும்
சேர்ந்திருந்தே என்றும்
சுகங்கள் காணவே
விரைந்து வாராயோ.....?

(வெண்பஞ்சு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றை தருவோர்கள்

**பல்லவி**

நாற்று நட்டு களை பிடுங்கி
நீர் இறைத்து காத்திருக்க
நிலம் நிறைய விளைஞ்சி நிற்குது நெல்லு - எங்கள்
பஞ்சமெல்லாம் பறக்குமினி சொல்லு...

(நாற்று....)

**சரணம்**

ஏர் பிடித்து நிலம் உழுது
ஏற்ற காலம் விதை விதைத்தோம்
அலை அலையாய் அணிவகுத்து
விளைந்த பயிர் ஆடுது பார் காற்றிலே...
வரப்பில் நீரும் நிறைந்திருக்க
வானமகள் வரம் கொடுத்தாள்
விடிவு காலம் விரைவில் வரும் வாழ்விலே...

(நாற்று....)

பயிர் செழிக்க உரமுமிட்டு
கிடுகினாலே குடிலமைத்து
காவல் காப்போம் கண்விழித்து இரவிலே...
கொட்டும் பனி வெயில் மழையும்
பட்டுமேனி பழகிவிட்டோம்
பச்சைப்பயிர் பசுமை தர
பகலினிலும் பசிமறந்தே
பார்த்திருப்போம் வயலினை...

(நாற்று....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாத முடிவினிலே
முற்றிவிட்ட நெல்மணியை
வெட்டி எடுத்து பையிலிட்டு
கொண்டு வந்து சேர்த்திடுவோம் ஊரிலே...
பட்டினியைப் போக்கும் உழவர்
படும் துயரம் தொடர்கதைதான் நாட்டிலே...
சேற்றில் இறங்கி நாற்று நட்டு
சோற்றை உண்ணத் தருவோர்கள்
ஏற்றம் காணவில்லை தங்கள் வாழ்விலே...

(நாற்று....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கம்

பல்லவி

இளம் மாலைத் தென்றல் வீசும்
இந்த நதியின் கரையின் ஓரம்
வந்து அமர்ந்திருக்கும் நேரம்
நொந்த உள்ளம் மெல்ல ஆறும்!

அனுபல்லவி

செந்நிறமாக ஒளியைச் சிந்தி
செங்கதிரும் அடியில் மறைய
தன்னொளியை வீசி எங்கும்
வெண்ணிலவு அழகை ஊட்டும்!

(இளம் மாலை...)

சரணம்

பணம் தேடித் தேடிப் பாரில்
பல துயர்கள் கண்டேன் வாழ்வில்
மனம் உடைந்து போன நிலையில்
மணம் வீசும் இனிய கனவு
தினம் நினைவில் வாழும் காலம்
திரும்பாதோ அந்த பருவம்!

(இளம் மாலை...)

சிறுவயதில் கவலை இன்றி
ஒரு புதிய உலகில் வாழ்ந்தேன்...
பொங்கும் பாச மழையில் நனைந்து
அன்பு வெள்ளத்தில் நான் மிதந்தேன்...
அந்த நாளும் மீண்டும் இங்கு
வந்து போகுமோ நீ சொல்லு!

(இளம் மாலை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது மனிதன்

**பல்லவி**

கல்வி யோடு கலைபலவும்
கற்றுத்தேர்ந்து உலகிலே
வல்லவ ராக வாழ்கின்ற
வழிமுறையை நாம் கண்டிடுவோம்
நல்லோர் வழியில் நடந்திங்கே
நாளைய உலகைப் படைத்திடுவோம்.
(கல்வி...)

**சரணம்**

நித்தம் இந்த நிலமீதில்
நிலவும் பகைமை நீங்கிடவே
புத்தம் புதிய சிந்தனையால்
புதுமை பலவும் புரிந்திடுவோம்.
(கல்வி...)

விஞ்ஞா னத்தின் விளைவாலே
வளரும் மேலை நாட்டோரை
விஞ்சும் வகையில் நாளையிங்கு
விந்தை மனிதன் தோன்றிடுவான்.
(கல்வி...)

குற்றம் இல்லா குடிகளினை
குவலயம் மீதில் உருவாக்கி
உற்றார் போல் வாழ்கின்ற
உயர்ந்த மனிதராய் மாற்றிடுவோம்.
(கல்வி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய உலகின் நாயகராய்
நாட்டின் தலைமை ஏற்பவராய்
தோளை உயர்த்தி துணிவுடனே
தோன்றும் புதிய தலைமுறையே.
(கல்வி...)

உதிரம் சிந்தி உழைப்போர்கள்
உயர்வாய் வாழும் வழிகாண
புதிய வரவாய் புவிமீதில்
புலர்வான் நாளை புதமனிதன்?
(கல்வி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லவி**

கட்டில் மீது கால் நீட்டி
கனவுகள் காணும் காலம்...
பெட்டிப் பாம்பாய் அடக்கிவைத்து
பெருஞ்சுமை என்றிடும் அவலம்!
(கட்டில் மீது....)

**சரணம்**

கையைப் பிடித்து நடந்தவர் கூட
கைவிட்டுப் போனதினாலே
கைத்தடியே அவர் துணையாகும் - இனி
காலங்கள் கரைய
காலனின் வரவை
கண்கள் நாளும் தேடும்...
வலிமை இழந்து
வாடிடும் உடலும்
வலியுடன் வருந்தி வாழும்...
(கட்டில் மீது....)

இறந்தகால இனிமைகள் நெஞ்சில்
இளமையைக் காட்டி மறையும்
இழந்த வாழ்வை எண்ணி உள்ளம்
இரத்தக் கண்ணீர் சிந்தும்
புவியில் புரிந்த புண்ணியம் யாவும்
புன்னகை பூத்திடச் செய்யும்
பண்ணிய பாவங்கள் பலவும் வந்து
பழியைக் கூறி நிற்கும்!
(கட்டில் மீது....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்த வாழ்க்கை தூரமாகிட
துரத்தும் காலம்
துயரைக் கொடுத்தே வருத்தும்...
ஊரும் உறவும் உதறித் தள்ளிட
நோயில் விழுந்து
நொடிந்து உடலும்
பாயில் முடக்கிப் போடும்...
நாளை நமக்கும் இதுவே நடக்கும்
என்பதை இளையோர்
உணர்ந்து நடந்தால்
முதியோர் வாழ்வு இனிக்கும்!

(கட்டில் மீது....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலித்திடும் செந்தமிழ்

**பல்லவி**

செப்பிட இனித்திடும் தேன்தமிழ் - இந்த
செகமெங்கும் ஒலித்திடும் செந்தமிழ்!
(செப்பிட....)

**சரணம்**

முந்திய முதல் மொழி உலகிலே - என
முன்னிலை பெற்ற மணிமொழி
சிந்தனை யாளர்கள் ஆய்ந்திட - என்றும்
சிகரமாய் திகழ்ந்திடும் சீர்மொழி!
(செப்பிட....)

கவிதைகள் காவியம் கதைகளால் - எமை
களிப்புற வைத்திடும் கவின்மொழி
சுவைமிகு சொற்களால் செவியினுள் - தினம்
சென்றே இனித்திடும் கனிமொழி!
(செப்பிட....)

சரளமாய் சகலரும் புரிந்திட - எங்கும்
சந்தமாய் ஒலித்திடும் செம்மொழி
உரமென உணர்வினில் ஊறியே - எங்கள்
உயிரினில் உறைந்திடும் தமிழ்மொழி!
(செப்பிட....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடெங்கும் ஒலித்திடும் நற்றமிழ் - எங்கள்
நாவினில் சுழன்றிடும் நறுந்தமிழ்
பாரெங்கும் மணத்திடும் பூந்தமிழ் - நாம்
பாசமாய் போற்றிடும் பெருந்தமிழ்!
(செப்பிட....)

மூவேந்தர் வளர்த்திட்ட முத்தமிழ் - மண்ணில்
வரலாறு படைத்த வண்டமிழ்
பாவேந்தர் போற்றிய பைந்தமிழ் - பல
பாயிரங்கள் தந்த பழந்தமிழ்!
(செப்பிட...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைப்பெண்கள்

**பல்லவி**

புதுயுகம் படைக்கும்
புரட்சிப் பெண்கள் எங்கே...?
பாரதி பாடிய
புதுமைப் பெண்கள் எங்கே...?
புவியினை மாற்ற
புறப்பட்டு வந்தோம் நாமே...
(புதுயுகம்....)

**சரணம்**

வீட்டுக்குள்ளேயே அடைந்திருந்து
வீணாய்ப் போனது காலம்
நாட்டுக்காக நல்லது செய்ய
நாமும் கொள்வோம் சபதம்

இன்றைய உலகை
இயங்கச் செய்வதும் பெண்தான்
தோட்டம் செய்வதும்
கோட்டையை ஆள்வது
கோதையர் குலம் தானே!
(புதுயுகம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைகுறை ஆடையில்
ஆட்டம் போடுவது
அரிவையர் சுதந்திரம் அல்ல
இதை அறிந்து நடக்க வேண்டும்!
உலகைப் புரிந்து வாழவேண்டும்!

அடிமைக் குணத்தை
அறுத்து எறிய வேண்டும்!
ஆனால் அடக்கம் அச்சம்
அமைய வாழ வேண்டும்!
பெண்ணின் பெருமை பேண வேண்டும்!

(புதுயுகம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த உள்ளங்கள்

**பல்லவி**

ஆண்: தண்ணீர் குடம் தூக்கி
தடம்பதித்து போற பெண்ணே
தவிக்கிறேனே நானுமிங்கே
தாகம் தீர்க்க வருவாயா...?
பெண்: வீதியோரம் நின்றிருந்து
வீண் வம்பு பேசி வந்து
கண்ணாலே தூண்டில் போட்டு
பெண் மனதை சீண்டலாகுமோ...?

(தண்ணீர்....)

**சரணம்**

ஆண்: கண்ணாலே கதை பேசி
கடந்து என்னைப் போகையிலே
கரைகிறேனே நானுமிங்கே
கவலையிலே எந்நாளும்
பெண்: பொன்னான காலமெல்லாம்
போகிறதே மச்சானே
பொன் தாலி என் கழுத்தில்
போடுவது எப்போது....
ஆண்: கொஞ்ச நாள் பொறு பெண்ணே
கொட்டு மேளம் கொட்டிடவே
கட்டிடுவேன் தாலி அப்போது...
பெண்: கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதை
விட்டு விட்டு என் நிலையை
கொஞ்சம் மனதில் நினைத்துப் பாருங்க

(தண்ணீர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்: நம்பிக்கையாய் காத்திருப்பாய்
நானும் உன்னைக் கைவிடமாட்டேன்
பெண்: கட்டித்தாலி விரைவாக
கூட்டிச் செல்ல வில்லை என்றால்
செத்துடுவேன் நானும் சத்தியமாக....
ஆண்: கட்டுப்பாட்டில் வளர்ந்த பொண்ணு
தட்டுக் கெட்டுப் போகலாகுமா?
பெண்: வெட்கப்பட்டு வீட்டுக்குள்ளே
முடங்கி நானும் இருக்க வேண்டுமா?
ஆண்: கண்ணே உனது காதல் கண்டு
எனது உள்ளம் மகிழ்கிறதே
பெண்: ஆயிரம்தான் இருந்தாலும் என்
ஆசை மச்சான் நீங்கள் மட்டும்தான்
இருவரும்: இனி பிரிவின்றி உறவோடு
இசைபாடி மகிழ்வோமே இன்ப வானிலே...

(தண்ணீர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுத் துயர்

**பல்லவி**

வான் மீதில் மிதந்து செல்லும்
வெண்பஞ்சு மேகங்களே...
என் நெஞ்சத் துயரைக் கொஞ்சம்
எடுத்துச் சொல்லுங்கள்...
(வான் மீதில்....)

**சரணம்**

ஆசையாக மணம் முடித்து
ஆனந்தமாய் வாழ்ந்து வந்தோம்
ஆறேழு மாதத்தில் அத்தனையும் போனதம்மா...
ஊரோடு தொழில் புரிந்தால்
உறவோடு மகிழ்ந்திருப்போம்
உழைப்பை தேடி அவர்
ஊரைவிட்டு போனதினால்
வேரறுந்த மரமாக
வேதனையில் வாடுகிறேன்... (வான் மீதில்....)

வளமாய் வாழ்ந்திடவே
வழி தேடிச் சென்றாலும்
நலமாய் இங்குநானும் இல்லையே...
நாயகன் பொருள் சேர்த்து
நாட்டிற்கு திரும்பும் வரை
நாளும் துயில் இழந்தே
வாழும் என் நிலையை
சூழும் மேகங்களே
சுமந்து சென்று சொல்லுங்கள்! (வான் மீதில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனாக் கண்டேன்

**பல்லவி**

கனவுகள் காண்போம் என்றார் - கலாம்
கனவே வாழ்வெனச் சொன்னார்!

**அனுபல்லவி**

கனவே நானும் காணுகின்றேன் - அது
நனவாய் மாற நினைக்கின்றேன்
நாளும் அதற்காய் உழைக்கின்றேன்
நம்பிக்கையுடனே தொடர்கின்றேன்.
(கனவுகள்....)

**சரணம்**

வெற்றி முரசொலி
கொட்டி முழங்கிட
சுற்றிலும் மகிழ்ச்சிக்
குரல்கள் ஒலித்திட
அற்றம் இல்லாத
ஆட்சி அமைந்தே
கற்றவர் ஆளும்
நாட்டினைக் கண்டதும்
கட்டிலில் இருந்து
எழுந்தேன் நானும்...
கண்களைத் திறந்தேன்!
கலைந்து போனதே யாவும்
அடடா கனவே அத்தனையும்!
(கனவுகள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை நீக்கி
ஒற்றுமை ஓங்கிடும்!
வன்முறை இல்லாமல்
வழிகள் திறந்திடும்!
வறுமை மறைந்தே
வளங்கள் நிறைந்து
கலைகளைப் போற்றும்
காலம் கனிந்திடும்!
காட்சியைக் கண்டு
களிப்புடன் விழித்தேன்!
கனவே என்றதும்
கவலையில் வீழ்ந்தேன்!
(கனவுகள்....)

பெண்கள் பெருமைகள்
பெற்றுத் திகழ்ந்திட
கண்ணியம் பெற்று
கற்றோர் மாண்புற
உழைப்போர் தங்கள்
உரிமைகள் வென்று
உவப்புடன் வாழ்ந்திட
எல்லாம் மாந்தரும்
இல்லாமை இல்லாமல்
இருப்பதைப் பார்த்து
இமைகளைத் திறந்தேன்!
கனவே இதுவும் கனவேதான்...
கனவில் கண்ட
காட்சிகள் இதனை
நனவில் காண்பேனோ....?
(கனவுகள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாப் புகழும் இறைவனுக்கே

**பல்லவி**

உன் புகழ்பாடி இறைவா நானும்
இருகரம் ஏந்துகின்றேன்...
என் கவலைகள் தீர்ந்திட - உன்
அருளினை வேண்டுகின்றேன்...

(உன் புகழ்)

**சரணம்**

வானம் வையம் யாவையுமே
படைத்த வல்லவன்......
வாழும் உயிர்கள் அனைத்தையுமே
காத்து வருபவன் ...
உன் அடி பணிந்து
நானும் வாழ்ந்திட....
அருளினை என்றும்
இறக்கிடுவாய் இறைவா......

(உன் புகழ்)

பாரில் எங்கும்
பாவங்கள் நிறைய
பாவிகளாகினோம் நாமே
கொடும் புயல் வெள்ளம்
கடும் பிணி வறுமை
சோதனை பல கண்டோம் ....
பாவங்கள் பொறுத்து நீயும்
வேதனை தீர்த்துடுவாயே...
உன் கருணையினால் எம்மை
காத்திடுவாய் இறைவா...

(உன் புகழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லினுள் வாழும் தேரைக்கும்
கருவினுல் வளரும் குழந்தைக்கும்
உணவினை தந்து காப்பவனே
உன் புகழ் இயம்பிட முடியாது...
இதற்கு
நிகராய் ஏதும் கிடையாது...
எம்மை படைத்து காக்கின்ற
எல்லப் புகழும் இறைவனுக்கே!

(உன் புகழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**க**விஞர் மூதூர் முகைதீன் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கிய உலகில் பயணித்து ஆர்ப்பாட்டமின்றி எழுதி வருபவர்.

பாடல் என்பது செவிவழிபுகுந்து மனதுக்கு இன்பம் தருவதாகும். நம் நாட்டில் சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் என்பவன வளர்ச்சியடைந்த அளவிற்கு இசைப் பாடல்களை நூலாக்கும் முயற்சி வளர்ச்சியடையவில்லை. இந்த வகையில் கவிஞர் மூதூர் முகைதீனின் முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

"**கனாக் கண்டேன்**" பாடலாக்கம் அவரது எட்டாவது நூலாகும். மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராக இருந்து இப்பிரதேசத்தில் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி வருவதோடு "ஓசை" என்ற கவிதைச் சிற்றிதழின் ஆசிரியராகவும் உள்ளார்.

உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார். இவர் தனது இலக்கியப் பணிக்காக கலாபூஷணம், முதலமைச்சர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். எதிர்காலத்தில் இன்னும் பல நூல்களை வெளியிட்டு, ஆக்க இலக்கியத்துறைக்கு வளம் சேர்க்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

■ மூதூர் ஏ.எஸ். உபைத்துல்லா

9 786249 601000

ISBN : 978-624-96010-0-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org